செ.வெ.எண்:32 நாள்:13.07.2018

# அரியலூர் மாவட்டத்தில் பொன்னேரியில் குடிமராமத்து பணிகள் ஆய்வு.

அரியலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் ஒன்றியம், குருவாலப்பர் கோவில் கிராமத்தில் உள்ள பொன்னேரியில் நடைபெறும் குடிமராமத்து பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில், நடுக்காவேரி வடிநில வட்டம் மற்றும் கீழ்காவேரி வடிநில வட்டத்தின் குடிமராமத்து திட்ட கண்காணிப்பாளரும், தமிழ்நாடு மாநில தாய்,சேய் நல ஆணையர், மாநில விபத்து சிகிச்சை நல ஆணையர், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் **திரு.மரு.தரேஷ் அகமது, இஆப.,** அவர்கள் ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது, குடிமராமத்து திட்ட கண்காணிப்பாளர் அவர்கள் தெரிவித்ததாவது,**

நடுக்காவேரி வடிநில வட்டத்திறக்குட்பட்ட அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், ஜெயங்கொண்டம் ஒன்றியம், குருவாலப்பர் கோவில் கிராமத்தில் உள்ள பொன்னேரியில் 2018-19ஆம் நிதியாண்டில் குடிமராமத்து திட்டத்தின்கீழ் 44.60 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த ஏரி கரையின் நீளம் 4800 மீட்டர். பாசன பரப்பு 1374 ஏக்கர். இந்த ஏரியிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடுவதற்கு நான்கு மதகுகளும், மழைக்காலங்களில் உபரி நீர் வெளியேற்றுவுதற்கு 24 மீட்டர் நீளமுள்ள ஒரு கலிங்களும், 54 மீட்டர் நீளமுள்ள ரெகுலேட்டரும் அமைக்கப்படவுள்ளது.

இப்பணியினை பொன்னேரி பாசனதாரர்கள் சங்கம் மூலம் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் அனைத்தும் பருவமழை தொடங்குவதற்கு முன் முடித்திட சம்மந்தப்பட்ட பாசனதாரர்கள் சங்கத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என நடுக்காவேரி வடிநில வட்டம் மற்றும் கீழ்காவேரி வடிநில வட்டத்தின் குடிமராமத்து திட்ட கண்காணிப்பாளரும், தமிழ்நாடு மாநில தாய்,சேய் நல ஆணையர், மாநில விபத்து சிகிச்சை நல ஆணையர், தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் **திரு.மரு.தரேஷ் அகமது, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்தஆய்வின்போது, செயற்பொறியாளர் (பொதுப்பணித்துறை நீ.வ.ஆ) டி.தட்சணாமூர்த்தி, உதவி செயற்பொறியாளர் சாந்தி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, ஜெயங்கொண்டம் வட்டாட்சியர் குமரய்யா, ஜெயங்கொண்டம் வட்டார வளர்ச்சி அலுவலர் அமிர்தலிங்கம் மற்றும் பாசனதாரர் சங்க உறுப்பினர்கள், அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**